**கவனிக்க** .- *2017.04.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2015 - 2017 අප්‍රේල් මස 12 වැනි බදාදා - 2017.04.12

*2015 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 746 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 746 |



**கவனிக்க.**- *புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2017, மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


745-B81161-5,403 (04/2017)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வத்தளை - மாபோல நகர சபை

ஊன்வினைஞர் கட்டளைச்சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

*இங்கு கீழே குறிப்பிடப்படும் அட்டவனையில் பெயர்கள் குறிப்பிடப்பட்ட தனிநபர்களால் அவர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2017.12.31 ஆந் திகதி வரை மாட்டிறைச்சி விற்பனை நிலையத்திற்கான அனுமதி பத்திரமொன்றிற்காக விண்ணப்பிக்கப்பட்டிருப்பதனால், இந்த அனுமதிப் பத்திரத்தை வழங்குவது சம்பந்தமாக, வத்தளை-மாபோல நகர சபை அதிகார பிரதேசத்தில் வசிக்கும் யாராவதொருவர் எதிர்ப்பு தெரிவிப்பதனால், தங்களது எதிர்ப்புக்கான காரணங்களைக் காட்டி விபரங்களோடு இரண்டு பிரதிகளுடன் கடிதமொன்றின் மூலம் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் எனக்கு பதிவுத்தபால் மூலம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென ஊன்வினைஞர் கட்டளைச்சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) இல. 7 (2) ஆகிய விதிகளின்படி இத்தால் அறிவிக்கின்றேன்.*

*டீ. பீ. எச். சமரவிக்கிரம,*
*செயலாளர் மற்றும் அதிகாரங்கள், செயற்பாடுகள்*
*பணிகள் நடைமுறைப்படுத்தும் அலுவலர்,*
*வத்தளை-மாபோல நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*வத்தளை-மாபோல,*
*2017, மாச்சு 28.*

**அட்டவணை**

| *தொடர் இல.* | *விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும்* | *வியாபாரம்* | *தொழிலை நடாத்தும் இடம்* |
|---|---|---|---|
| *01* | M. T. M. *ரியாஸ்* | *மாட்டிறைச்சி விற்பனை நிலையம்* | *இல. 762, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை* |

*12-360*

---

# நானாவித அறிவித்தல்கள்

## நீர்கொழும்பு மாநகர சபை

விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கான கட்டணம் அறவிடல்

*மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 272 (6) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பு மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள துணை விதியை தயாரிக்கின்ற தத்துவத்திற்கு ஏற்ப 2015.12.28 ஆந் திகதிய 1947/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிக்கு ஏற்ப விளம்பர அறிவித்தல் பற்றிய துணை விதியின் கீழ் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அதிகார பணிகள், கடமைகளை செயற்படுத்துகின்ற அலுவலர் என்ற வகையில் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 286 (அ) பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கே. எஸ். சீ. சுகத் குமார,*
*மாநகர ஆணையாளர்,*
*அதிகாரம், கடமைகள், பணிகளை*
*செயற்படுத்துகின்ற அலுவலர்,*
*நீர்கொழும்பு மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*நீர்கொழும்பு.*

நீர்கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குள் காட்சிப்படுத்துகின்ற விளம்பர அறிவித்தலுக்காக 2017, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து இங்கு அட்டவணை 1 மற்றும் 2 ஆகியவற்றில் குறிப்பிட்டவாறு கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (அரச வரி உள்ளடங்களாக)

**அட்டவணை I**

| தொடர் இல. | பதாகைகளின் தன்மை | சதுர அடி அளவு | ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்கு குறைவான காலத்திற்காக (ரூபா) |
|---|---|---|---|
| 1 | எல். ஈ. டி. திரையை பயன்படுத்தி தமது வர்த்தக விளம்பர பதாகையை காட்சிப்படுத்துவதற்கு | 1 இற்கு | 500 0 |
| 2 | எல். ஈ. டி. திரையை பயன்படுத்தி வர்த்தக ரீதியாக வேறு ஆட்களின் வியாபார விளம்பர பதாகையை காட்சிப்படுத்துவதற்கு | 1 இற்கு | 1,000 0 |
| 3 | ஒளியூட்டப்படாத விளம்பர பதாகையை காட்சிப்படுத்துவதற்கு | 1 இற்கு | 50 0 |
| 4 | ஒளியூட்டப்பட்ட விளம்பர பதாகையை காட்சிப்படுத்துவதற்கு | 1 இற்கு | 100 0 |
| 5 | தனியார் காணி மற்றும் கட்டிடங்களில் கட்அவுட்களை காட்சிப்படுத்துவதற்கு | 1 இற்கு | 200 0 |

**அட்டவணை II**

| தொடர் இல. | விளம்பர அறிவித்தல் தன்மை | சதுர அடி அளவு | நாட்களுக்காக (ரூபா) | வாரங்களுக்காக (ரூபா) | மாதத்திற்காக (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | பதாகைகளுக்காக | 1 இற்கு | | 2 வாரங்களு க்காக ரூபா 30 | ஒரு மாதத்திற்கு ரூபா 40 ஒரு மாதத்திற்கு மேல் ரூபா 50 |
| 2 | கம்பங்களில் பொருத்தப்படுகின்ற கொடிகளுக்காக | 1 இற்கு | முதல் தினத்தி லிருந்து 3 நாட்கள் வரை ரூபா 15 | 1 வாரத்திற்கு ரூபா 20- 02 இரண்டு வாரங்களுக்கு ரூபா 25 | |

4-276

---

## நீர்கொழும்பு மாநகர சபை

வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் - 2017

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 272 (32) ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள துணை விதிகளை ஆக்கும் அதிகாரத் தத்துவத்திற்கு இணங்க 1989.01.20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வரத்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால கட்டளைகளின் XVIII ஆம் பாகத்தின் கீழ் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான துணை விதியை பிறப்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரி, அத்தகைய அதிகாரத் தத்துவங்களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 286 (அ) பிரிவின் பிரகாரம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்

தத்துவங்களுக்கு இணங்க கீழ்க்காணும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

கே. எஸ். சீ. சுகத் குமார,
மாநகர ஆணையாளர்,
அதிகாரம், கடமைகள், பணிகளை
செயற்படுத்துகின்ற அலுவலர்,
நீர்கொழும்பு மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
நீர்கொழும்பு.

நீர்கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள கீழ்க்காணும் இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பில் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் கீழ் தரப்பட்டுள்ள I மற்றும் II ஆம் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்களை அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியப்படுத்தப்படுகின்றது. (அரசாங்கத்தின் வரிகள் அடங்கலாக)

**அட்டவணை I**

1. பிரதான பஸ் நிறுத்தும் நிலையத்தின் முன்பகுதி மற்றும் வீதியின் இருமருங்குகள்
2. நீர்கொழும்பு நீதிமன்ற வாளகத்தின் முன்பகுதி
3. லெயிடென் லேய்ன் விளையாட்டு மைதானம் (ஒவ்வொரு வருடத்திலும் திசெம்பர் நத்தார் பண்டிகை காலத்தில் மாத்திரம்)
4. நில்லந்துவ சந்தியிலிருந்து பி. பீ. மொஹமட் சந்தி வரை செல்லும் க்ரீன்ஸ் வீதியின் மணிக்கோபுரத்திலிருந்து பி. பீ. முமொஹமட் சந்தி வரையான வீதியின் இருமருங்குகள்
5. குரூஸ் வீதியின் மீமடுவ கட்டிடத்திலிருந்து பெர்னாந்து வீதி, பிரதான வீதி ஆகிய வீதிகள் சந்திக்கும் நாற்சந்தி வரையான வீதியின் இரு மருங்குகள்
6. நில்லந்துவ சந்தியிலிருந்து தலாதுவ சந்தி வரை இடது பக்கத்திலுள்ள ஜயந்தி தளபாடக் கடைக்கு அருகிலுள்ள பஸ் நிறுத்தும் நிலையத்தின் கட்டிடத்தொகுதியின் முன்பகுதி
7. பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு அருகிலிருந்து நீதிமன்றம் வரை செல்லும் பிரதான வீதியின் இருமருங்குகள் மற்றும் கோட்டை மைதான சுற்றுவட்ட வீதியின் வலது பக்க புதிய வாடி வீடு வரை இடதுபக்கமாக அமைந்துள்ள நீதிமன்ற வளாகம் வரையான பகுதி
8. தலாதுவ சந்தியிலிருந்து நிக்ல்ஸ் மார்க்கெஸ் மாவத்தை கொழும்பு வீதி வரையான (புகையிரதப் பாதைக்கு இணையாக செல்லும் நில ஒழுங்கை) பகுதி
9. கொப்பரா சந்தியிலிருந்து மக வீதி ஆலயம் வரையான பிரதேச வீதியின் இருமருங்குகள் மற்றும் ஜுவல் லங்கா நிறுவனத்தின் முன்னால் ஆரம்பமாகி பழைய புத்தளம் வீதி நேஷன் ட்ரஸ்ட் வங்கி செல்லும் வீதியின் இடது பக்கம்
10. கொழும்பு புத்தளம் வீதியிலுள்ள அபேசேக்கர ஒழுங்கைக்கு அருகிலிருந்து வலது பக்க முதலிந்து மென்டிஸ் மாவத்தை வரையான முதலிந்து மென்டிஸ் மாவத்தையின் இடது பக்கம் மற்றும் விஜேபால மென்டிஸ் மாவத்தையின் இடது பக்கம்
11. கொழும்பு, புத்தளம் வீதியிலுள்ள நவலோக்க வைத்தியசாலைக்கு அருகில், த சில்வா மாவத்தை வரையான வீதியின் இடது பக்கம்
12. கொழும்பு - புத்தளம் வீதி, பாள்தி சந்தி, கொமர்ஷல் வங்கி அமைந்துள்ள இடத்திலிருந்து முன்னால் சிங்கர் மெகா நிறுவனம் வரை செல்லும் வீதியின் வலது பக்கம்.

| விபரம் | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| (i) மோட்டார் சைக்கில் | 20 0 |
| (ii) முச்சக்கர வண்டி | 30 0 |
| (iii) கார்/வேன் | 50 0 |
| (iv) லொறி | 60 0 |

**அட்டவணை II**

| | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| (i) நீர்கொழும்பு பஸ் நிலையத்தினுள் பிரவேசிக்கும் பஸ் வண்டி | 70 0 |
| (ii) நீர்கொழும்பு மேலதிக பஸ் ண்டி நிறுத்தப்படும் நிலையத்தினுள் பிரவேசிக்கும் பஸ் வண்டி | 30 0 |

4- 277

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.